# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.188/மா/2024**
**நாள் 13.02.2025**

திரு.கோ.கோவிந்தராஜ்,
சென்னை–600 083. ......... மனுதாரர்

1) மண்டல அலுவலர்,
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி.

2) திரு.R.வாசுதேவன்,
தியாகராய நகர்,
சென்னை–600 017 ........ எதிர் மனுதாரர்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி, அசோக்நகர், 15வது தெரு, கதவு எண்.22/43 என்ற முகவரியில் வசிக்கும் திரு.கோ.கோவிந்தராஜ் என்பவரின் 27.09.2024 நாளிட்ட மனு 30.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தால் பெறப்பட்டு, 188/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, அசோக்நகர், 15வது தெரு, கதவு எண்.22/43 என்ற முகவரியில் வசிக்கும் திரு.கோ.கோவிந்தராஜ் என்பவரின் முறையீட்டு மனுவில் :-

“நான் வசிக்கும் வீடு அலுவலகத்திலிருந்து சுமார் 1000 மீட்டர் தொலைவில் கதவு எண்.6/96, ஸ்ரீசத்ய சாய் இல்லம், South West போக் ரோடு, தி.நகர், சென்னை–17 என்ற முகவரியில் உள்ள கட்டிட முன்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதை மற்றும் கால்வாயை ஆக்கிரமித்து 5 அடி உயரத்தில் குறுக்கு சுவர்கள் அமைத்து 15 அடி அகலம், 30 அடி நீளத்தில் 8 அடி உயரத்தில் Steps & Ramp அமைக்கப்பட்டு ஆக்கிரமித்துள்ளதால் பாதசாரிகள் நடைபாதையை பயன்படுத்த முடியவில்லை.

மேலும், ஆக்கிரமிப்பு இடத்தில் EB Cable அடியில் செல்வதால் EB Cable பழுதடையும் காலங்களில் அங்கு சீர் செய்ய முடியவில்லை. ஆகவே, பெருநகர சென்னை மாநகராட்சி நடைபாதையை ஆக்கிரமிப்பு செய்துள்ள கட்டிட உரிமையாளரிடம் அபராதம் வசூலித்து, வரும் காலங்களில் ஆக்கிரமிப்பு செய்ய கூடாது என்று எச்சரிக்கை விடுத்து Notice விநியோகித்து 7 தினங்களில் ஆக்கிரமிப்பை வீடியோ புகைப்பட ஆதாரங்களுடன் பதில் அளிக்க உத்தரவிடக் கோரி பொதுமக்கள் நலன் கருதி இம்மனு அளிக்கப்படுகிறது. தாமதிக்கும்பட்சத்தில் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர நேரிடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்''.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 21.10.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலர் 20.11.2024 நாளிட்ட தனது அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

''பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கட்டிட உரிமையாளரை சாலையில் பாதசாரிகளுக்கு இடையூறாக இருக்கும் ரேம்பை அகற்றிட அறிவுறுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் கட்டிட உரிமையாளர் சாலை பகுதியில் உள்ள ரேம்பை அகற்றினார். இது சம்பந்தமான புகைப்படத்தை சமர்ப்பிக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.01.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.12.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 03.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

''மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் சமூக செயற்பாட்டாளர் ஆவேன். எனது வீட்டிலிருந்து சுமார் 1000 மீட்டர் தொலைவில் சென்னை–17, தி.நகர், சவுத் போக் ரோடு, ஸ்ரீ சத்ய சாய் இல்லம், கதவு எண்.6/96 என்ற முகவரியில் உள்ள கட்டிடத்தின் முன்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதை மற்றும் கால்வாயை ஆக்கிரமித்து 5 அடி உயரத்தில் குறுக்கு சுவர் அமைத்து 15 அடி அகலம், 30 அடி நீளத்தில், 8 அடி உயரத்தில் படிகட்டுகள் மற்றும் சாய்வு தளம் அமைத்து உள்ளார்கள். இதனால் நடைபாதையை பொதுமக்கள் பயன்படுத்த முடியாமலும், ஆக்கிரமிப்பு பகுதியில் EB cable செல்வதால், அது பழுது அடைந்த நேரத்தில் அதனை சரி செய்ய முடியாமலும் உள்ளதால், அக்கட்டிட உரிமையாளரிடம் அபராதம் வசூலிக்கவும், இனி எதிர்காலங்களில் ஆக்கிரமிப்பு செய்யகூடாது என்று எச்சரிக்கை செய்யுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்''.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோர் 03.01.2025 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

''மனுதாரர் குறிப்பிட்ட இடத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கட்டிட உரிமையாளரை சாலையில் பாதசாரிகளுக்கு இடையூறாக இருக்கும் ரேம்ப்பை (RAMP) அகற்றிட அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் கட்டிட

உரிமையாளர் சாலை பகுதியில் உள்ள ரேம்ப்பை (RAMP) அகற்றி தெருவின் வெள்ளை கோட்டின் உள்ளாக அமைத்துவிட்டனர். மேலும் மனுதாரர் ரேம்பை அகற்ற கோரியதால் ஏற்கனவே சரி செய்யப்பட்டதை மீண்டும் அகற்றிட வீட்டின் உரிமையாளரிடம் அறிவுறுத்தப்பட்டது என்று மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இதற்கான ஆதாரமாக புகைப்படத்தினை பணிந்து சமர்ப்பிக்கின்றோம்."

மற்றொரு எதிர் மனுதாரரான திரு. R.வாசுதேவன் 03.01.2025 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

(1) எனது வீட்டில் கடந்த 35 ஆண்டுகளாக எனது குடும்பம் மற்றும் எனது தம்பி குடும்பத்துடன் வசித்து வருகிறோம். எங்கள் பகுதியில் ரோடு போடும்போது உயர்த்தி போட்டதினால், எங்கள் வீடு பள்ளத்தில் உள்ளது போல் ஆகிவிட்டது. அதனால் ஒவ்வொரு வருடமும் மழை காலத்தில் எங்களது வீட்டினுள் மழைநீர் புகுந்து விடும். அதனால் பண ரீதியாகவும், மன ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். இது குறித்து பலமுறை பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள், மற்றும் மக்கள் பிரிதிநிதிகளிடமும் தெரிவித்தும் எந்தவித பயனும் இல்லை.

(2) எங்கள் குழந்தைகள் தற்போதுதான் பள்ளியில் படித்து வருவதால் அவர்களின் படிப்பு செலவு மற்றும் எங்கள் மருத்துவ செலவு ஆகியவற்றால் எங்கள் வீட்டை இடித்துவிட்டு புது வீடு கட்ட பொருளாதாரம் இல்லை. அதனால் கடந்த 2022–ஆம் ஆண்டு எங்களை தற்காத்துக் கொள்ள எங்கள் வீட்டை புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஜாக்கி மூலம் சுமார் நான்கு அடி உயர்த்தியுள்ளோம். இதற்கு ரூ.30 இலட்சத்திற்கு மேல் செலவிட்டுள்ளோம். இதன் காரணமாக மழைநீர் உள்ளே வருவதில்லை. ஆனால், எங்கள் வாகனத்தை வெளியே எடுக்கவும், உள்ளே கொண்டு செல்லவும் முடியவில்லை. இதனால் எங்கள் வீட்டின் முன்புற படிக்கட்டுகள் மற்றும் ரேம்பை (RAMP) உயர்த்தி போட்டோம். ஆனால் சென்னை மாநகராட்சி எங்கள் வீட்டின் படிகட்டுகள் மற்றும் ரேம்ப் (RAMP) ஆகியவை சாலையை ஆக்கிரமித்து உள்ளதாக கூறியதால் ரூ.30,000/– செலவில் போடப்பட்ட RAMP ஐ அகற்றி மீண்டும் ரூ.25,000/– செலவு செய்து பெருநகர சென்னை மாநகராட்சியின் அறிவுறுத்தலின்படி மாற்றி அமைத்தோம்.

(3) எங்கள் வீட்டின் முன்பு நடைபாதை ஏதும் இல்லை. அதனால் எந்தவித ஆக்கிரமிப்பும் இல்லை. இருப்பினும் தற்போது மீண்டும் சென்னை மாநகராட்சி அலுவலர்கள் ஆக்கிரமித்துள்ளதாக கூறி தற்போது உள்ள படிக்கட்டுகளை அகற்றுமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். தற்போது உள்ள படிகட்டுகளை அகற்றினால் நாங்கள் வீட்டின் உள்ளே செல்லவும், வாகனங்களை உள்ளே எடுத்து செல்லவும் இயலாது.

(4) ஆனால் எங்கள் தெருவில் உள்ள எல்லா வீடுகளும் தங்கள் வீட்டின் முன்பகுதியில் உள்ள ரோட்டினை பயன்படுத்தி தான் கட்டுமானங்கள் செய்து உள்ளனர். ஆனால் அந்த வீட்டின் உரிமையாளர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் எவ்வித தாக்கீதும் வழங்கப்படவில்லை.

(5) மேலும் நாங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் அறிவுறுத்தியவாறு RAMPஐ அகற்றியதற்கான புகைப்படம் மற்றும் எங்கள் தெருவில் உள்ள சில வீடுகளின் முன்பு கட்டப்பட்டுள்ள ரேம்பின் புகைப்படத்தினையும் இம்முறைமன்ற நடுவர் முன்பு சமர்ப்பிக்கிறேன்.

6. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோர் வாக்குமூலம் மற்றும் மற்றொரு எதிர் மனுதாரர் திரு.ஆர். வாசுதேவன் அவர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் தான் வசிக்கும் வீட்டிற்கு அருகில் தியாகராய நகர், தெற்கு போக் ரோடில் கதவு எண்.6/96ல் அமைந்துள்ள வீட்டின் முன்பு 15 அடி அகலம், 30 அடி நீளத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி நடைபாதையும், மழைநீர் கால்வாய்யையும் ஆக்கிரமித்து படிக்கட்டுகள் கட்டி போக்குவரத்திற்கும், மழைநீர் செல்ல இயலாமலும் உள்ளதால், அதனை அகற்றிடவும் வீட்டின் உரிமையாளருக்கு அபராதம் விதிக்கவும் கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட இடம் கள ஆய்வு செய்யப்பட்டு, நடைபாதையில் பாதசாரிகளுக்கு இடையூறாக இருக்கும் RAMPஐ அகற்றிட கோரியதின் பேரில், கட்டிட உரிமையாளர் மேற்கண்ட RAMPஐ அகற்றி சாலையின் வெள்ளை கோட்டின் உள்ளே அமைத்தார்கள் என்றும் இருப்பினும் ஏற்கனவே சரி செய்யப்பட்ட RAMPஐ மீண்டும் அகற்றிட வீட்டின் உரிமையாளரிடம் அறிவுறுத்தப்பட்டது என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலத்தில் அறிய முடிகிறது.

மேலும் எதிர் மனுதாரரான திரு.ஆர்.வாசுதேவன் தங்கள் தெருவின் உயரம் அதிகமானதால், மழைகாலத்தில் தண்ணீர் வீட்டின் உள்ளே வருவதால், புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி வீட்டை நான்கு அடி உயர்த்தினோம். அதனால் தெருவிலிருந்து வீட்டிற்கு செல்லவும், வாகனம் உள்ளே செல்லவும் சிரமமாக இருந்ததால், வீட்டின் முன்புறம் RAMPஐ அமைத்தோம் என்றும் அந்த RAMPஐ பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் அகற்ற கோரியதால், இருமுறை ரூ30,000/– மற்றும் ரூ 25,000/– முறையே செலவு செய்து மாற்றி அமைத்தோம் என்பதும் தங்கள் வீட்டின் முன்பு நடைபாதை என்பது இல்லை என்றும் அதனால் தாங்கள் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றும், தங்கள் பகுதியில் சிலர் தங்கள் வீட்டிற்கு முன் கட்டுமானங்கள் அமைத்துள்ளதாகவும், ஆனால் அவர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியினால் எவ்வித Notice வழங்கவில்லை என்பதும், அவருடைய வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

7. மனுதாரர் புகார் தெரிவித்த வீட்டின் உரிமையாளர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலர்களின் அறிவுரைப்படி இருமுறை Rampஐ அகற்றியும் அதனை மாற்றியும் அமைத்துள்ளனர். பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் வீட்டின் உரிமையாளர் தெருவில் உள்ள வெள்ளை கோட்டிற்குள் Ramp அமைந்துள்ளதாக தெரிவித்துள்ளனர். வீட்டின் உரிமையாளர் தன்னுடைய வீட்டிற்கு முன் இருந்த Rampஐ அகற்ற கோரி பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் தெரிவித்துள்ளதாகவும், ஆனால் தங்கள் தெருவில் சில வீடுகளில் நடைபாதையை ஒட்டி Ramp அமைத்துள்ளதாக குறிப்பிட்டு அதற்கான புகைபட ஆதாரத்தை அளித்துள்ளார்.

8. இந்நேர்வில் புகாருக்குள்ளான எதிர்மனுதாரர் தன்னுடைய வாக்குமூலத்தில் அத்தெருவில் எல்லா வீடுகளுக்கு முன் உள்ள ரோட்டினை பயன்படுத்தி கட்டுமானங்கள் செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துள்ளதையடுத்து பெருநகர சென்னை மாநகராட்சி மேலே குறிப்பிட்டுள்ள பகுதியினை முழுவதுமாக கள ஆய்வு செய்து ஆக்கிரமிப்புகள் உள்ளதா

என்பதை கண்டறிந்து ஆக்கிரமிப்புகள் இருப்பின் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம், 1998–ன்படி உரிய நடவடிக்கை எடுத்து அது குறித்த அறிக்கையினை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்க மண்டலம் 10–ன் மண்டல அலுவலரை அறிவுறுத்துமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.கோ.கோவிந்தராஜ்,
22/43, 15வது தெரு,
அசோக்நகர், சென்னை–600 083.

2) திரு.ஆர்.வாசுதேவன்,
எண்.6/96, தென்மேற்கு போக் ரோடு,
தியாகராய நகர், சென்னை–600 017.

3) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 024.

4) மண்டல அலுவலர்,
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.64, என்.எஸ்.கே சாலை, கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

6) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், ஃசென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).